643-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க

## இணைப்பு V.

### மானியக் கோரிக்கை எண் 62
### மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்

### கொள்கை விளக்கக் குறிப்பு.

மானியக் கோரிக்கை எண். 62-ல், மாநில அரசு, பல்வேறு நிறுவனங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்கும் கடன்கள், முன்பணம் ஆகியவை குறித்த நிதி யொதுக்கங்கள் அடங்கும். பல்வேறு துறைகளின் வருவாய்க் கணக்குச் செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகளை அளிக்கும்போது பல்வேறு துறைகளுக்காக நிதியுதவி வழங்குவதற்குப் பின்னணியில் உள்ள பொதுவான கொள்கை விளக்கப்பட்டுள்ளது. இந்த மானியக் கோரிக்கையில், பல்வேறு துறைகள், அவற்றின் நடவடிக்கைகள் குறித்த முழு விவரத்தையும் அளிக்கும்போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள முக்கியமான நிதியொதுக்கங் கள் மட்டுமே இக்குறிப்பில் சிறப்பாகக் குறிப்பிடப்படு கின்றன. துறை வாரியான தனித்தனி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வளர்ச்சித் தலைப்பு. | 1991-92 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1991-92 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு. | 1992-93 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1. வேளாண்மை, சிறு பாசனம், மண்வளப் பாதுகாப்பு, வேளாண்மை நிதியுதவி நிறுவனங்கள், பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் .. | 18,25.63 | 27,89.52 | 22,13.00 |
| 2. மீனளம் .. .. | .. | .. | .. |
| 3. கால்நடை வளர்ப்பு | 9,98 | .. | .. |

| (1) | (2) | (3) | (4) |
| --- | --- | --- | --- |
| 4. உணவு, சேமிப்பு கிடங்கு வசதி .. | 0.02 | 0.01 | 0.01 |
| 5. மலைப்பகுதி மேம்பாடு | 1,93.65 | 2,29.20 | 2,22.73 |
| 6. கூட்டுறவு .. .. | 1,03.34 | 1,81.89 | 56.07 |
| 7. தொழில்கள் .. | 35,25.09 | 45,57.40 | 27,91.59 |
| 8. வீட்டு வசதி .. | 21,00.24 | 19,87.86 | 21,00.00 |
| 9. நகர்ப்பகுதி வளர்ச்சி | 25,03.01 | 21,31.02 | 39,25.02 |
| 10. மருத்துவம், பொதுச் சுகாதாரம் .. | 3.50 | 3.75 | 3.75 |
| 11. குடிநீர் வழங்கல்— துப்புரவு .. | 52,98.21 | 62,44.61 | 78,92.32 |
| 12. மின்சக்தி .. | 148,00.00 | 89,00.00 | 125,00.00 |
| 13. பொதுக் கல்வி, கலை, பண்பாடு. .. | 30.40 | 30.23 | 30.23 |
| 14. ஆதிதிராவிடர், பழங் குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் | 91.08 | 91.03 | 1,21.03 |
| 15. இலங்கை, பர்மா விலிருந்து தாயகம் திரும்பியோருக்கு மறு வாழ்வுத் திட்டங்கள் | 1,15.87 | 1,66.91 | 1,65.72 |
| 16. சாலைகளும் பாலங் களும் | 55.02 | 1,00.01 | 1,00.01 |
| 17. சாலைப் போக்கு வரத்து— சுற்றுலா. | 0.33 | 0.33 | 10,00.33 |
| 18. அரசுப் பணியாளர் களுக்குக் கடன்கள். | 39,10.02 | 42,75.30 | 48,31.30 |
| 19. ஏனைய கடன்கள் | 77.64 | 3,05.53 | 1,78.15 |
| மொத்தம் .. | **346,43.03** | **319,94.60,** | **381,31.26** |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1992 ஏப்ரல் 23]

## மின்சக்தி

2. 1992–93 ஆம் ஆண்டிற்கான இந்த மானியக் கோரிக்கையில், முக்கியமான முதலீடு, மின்வாரியத்தில் மின்சக்தித் திட்டங்களுக்கும் தமிழ்நாடு மின்சக்தி நிதியுதவி–அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கும் நிதியுதவி அளிப்பதும் ஆகும். இந்நோக்கத்திற்காக ரூபாய் 1,25.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## குடிநீர் வழங்கல் துப்புரவு

3. குடிநீர் வழங்கல் துப்புரவுத் திட்டங்களுக்காக 1992–93 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 78,92.32 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பின்வரும் திட்டங்களுக்காக முக்கிய நிதியொதுக்கங்கள் செய்யப்பட்டுள்ளன:

| | 1992–93 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|
| 1. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயற்படுத்தும் திட்டங்கள் — | | |
| (அ) குடிநீர் வழங்கு திட்டங்கள் | 41,37.92 | 44,92.32 |
| (ஆ) வடிகால் திட்டங்கள் .. | 3,54.40 | |
| 2. சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் வடிகால் வாரியத்தால் செயற்படுத்தப்படும் திட்டங்கள் : | | |
| (அ) குடிநீர் வழங்கு திட்டங்கள் | 20,00.00 | 34,00.00 |
| (ஆ) கழிவு நீரகற்று திட்டங்கள் | 14,00.00 | |
| மொத்தம் 1+2 | | 78,92.32 |

53-112—23 end.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

4. குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்று திட்டங்களை நிறைவேற்றுவதில் பெருமளவு மூலதன முதலீடுகள் செய்ய வேண்டியுள்ளது. பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசு வழங்கும் வரவு செலவுத் திட்ட நிதி ஆதாரங்களுடன், தமிழ்நாடு குடிநீர் வழங்கல்—கழிவு நீரகற்று வாரியத்தின் மூலம் செயற்படுத்தப்படும் குடிநீர் வழங்கு திட்டங்களுக்கு, ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்தும் நிதியுதவி பெறப்படுகிறது. இத்திட்டங்களுக்கு ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் கீழ்க்கண்ட முறையில் நிதியுதவி அளிக்கிறது:—

ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் பங்கு

| | | |
|---|---|---|
| (அ) | ரூபாய் ஒரு கோடி வரையில் செலவாகும் திட்டப் பணிகளுக்காக. | செலவில் 2/3 பங்கு. |
| (ஆ) | திட்டச் செலவில் அடுத்த ஒரு கோடி ரூபாய்க்கு .. .. | செலவில் 50 சதவீதம் |
| (இ) | திட்டச் செலவில் அடுத்த 3 கோடி ரூபாய் முதல் 5 கோடி ரூபாய் வரை. | செலவில் 40 சதவீதம் |
| (ஈ) | ரூபாய் 5 கோடிக்கும் அதிகமான செலவிற்கு. | ரூபாய் 5 கோடிக்கும் அதிகமாக ஆகும் செலவில் 25 சதவீதம். |

5. மேற்சொன்ன நிதியுதவி வழங்கும் முறை நகர்ப்பகுதி குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்று திட்டங்களுக்கும் பொருந்தும். ரூபாய் ஒரு கோடிக்கு குறைவாகச் செலவாகும் ஊரகத் திட்டங்களுக்கு, ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் அளிக்கும் நிதியுதவி, செலவில் 50 சதவீதம் என்ற அளவில் இருக்கும் ரூபாய் ஒரு கோடிக்கும் அதிகமாகச் செலவாகும் திட்டங்களுக்கு ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் அளிக்கும் நிதியுதவி, முதல் ரூபாய் ஒரு கோடிக்கு, செலவில் 50 சதவீதமாகவும், எஞ்சியச் செலவிற்கு மேலே நகர்ப் பகுதித் திட்டங்களுக்குக் குறிப்பிடப்பட்ட நிதியுதவி அளிக்கும் முறையிலும் இருக்கும்.

6. எஞ்சிய செலவிற்கு, உள்ளாட்சி மன்றங்கள், அவற்றின் சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தோ மாநில அரசு வழங்கும் மானியம் அல்லது கடனிலிருந்தோ வகை செய்யப்படுவதற்கு மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும்.

7. குறைந்த அளவு தேவைகள் திட்டம், விரைவு படுத்தப்பட்ட கிராம குடிநீர் வழங்கல் திட்டம், உலக வங்கியின் உதவியுடன் நிறைவேற்றப்படும் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம் (தமிழ்நாடு குடிநீர் வழங்கல் துப்புரவுத் திட்டம்) ஆகியவை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நிறைவேற்றி வரும் சில முக்கிய திட்டங்களாகும்.

8. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியம், அரசிடமிருந்து கடன்கள் பெற்று பல்வேறு பெருந் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இந்த வாரியம் நிறைவேற்றிவரும் சில முக்கிய திட்டங்களில் சென்னை குடிநீர் அனுப்புகை விநியோகத் திட்டம்/கிருஷ்ணா குடிநீர் வழங்கு திட்டம், உலக வங்கித் திட்டம் (சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் துப்புரவுத் திட்டம்) ஆகியவை அடங்கும். இத் திட்டங்களுக்கு, வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தொழில்கள்.

9. தொழில் துறைக்கு மொத்தம் ரூபாய் 27,91,59 இலட்சம் கடன் கணக்குகள் ஒதுக்கீடாக மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்துறைக்காக, செய்துள்ள முக்கிய நிதி ஒதுக்கீடுகள் வருமாறு:—

(i) விற்பனை வரிக் கடன் வழங்கும் (I.F.S.T. Loan) திட்டத்திற்கு தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகத்திற்கு ரூபாய் 3,50.00 இலட்சம் வழங்குதல்.

(ii) மூலதனத்திற்குப் பதிலாக மாற்றத் தக்கக் கடனாக, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு ரூபாய் 7,00.00 இலட்சம் வழங்குதல்.

(iii) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு ரூபாய் 12,50.00 இலட்சம் கடன்.

(iv) மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் சிறு தொழில்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக் கடன்களை வழங்குவதற்கு ரூபாய் 1,00.00 இலட்சம் வழங்குதல்.

## வீட்டு வசதி நகர்ப்பகுதி வளர்ச்சி.

10. வீட்டு வசதி நகர்ப்பகுதி வளர்ச்சிக்காக 1992-93 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 60,25.02 இலட்சம் நிதிஒயாதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கான ரூபாய் 7,00.00 இலட்சம் நிதியொதுக்கீடும், குறைந்த வருவாய் பிரிவினருக்குரிய வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்காக ரூபாய் 1,00.00 இலட்சம் ஒதுக்கீடும், நகர நாட்டுப்புற அமைப்புத் திட்ட வாரியத்திற்கு/நிதிக்குக் கடனாக ரூபாய் 2,00.00 இலட்சமும், தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நில மேம்பாட்டு/குடிசைப் பகுதி மேம்பாட்டு திட்டங்களை செயற்படுத்துவதற்கான ரூபாய் 9,75.00 இலட்சமும், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களுக்கு ரூபாய் 13,00.00 இலட்சமும், தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நகராட்சி வளர்ச்சி நிதிக்கு ரூபாய் 18,00.00 இலட்சமும் இதில் அடங்கும்.

## அரசு பணியாளர்களும், ஏனைய பணியாளர்களும்.

11. அரசுப் பணியாளர்களுக்கான பல்வேறு வகைப்பட்ட முன் பணத்திற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 48,31,30 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசு பணியாளர்கள் வீடு கட்டிக் கொள்வதற்கு முன் பணம் வழங்குவதற்காக நிதியொதுக்கீட்டில் பெரும்பகுதி அதாவது ரூபாய் 25,00.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

12. மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்கள் ஆகியோருக்குப் பல்வேறு வகைப்பட்ட முன் பணத்தை வழங்குவதற்காகவும் ரூபாய் 9.50 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகராட்சிப் பணியாளர்கள் வீடுகள் கட்டுவதற்கு முன் பணம் அனுமதிப்பதற்காகவும் 1992-93 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 50.00 இலட்சம் நிதி யொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

13. அரசுப் பணியாளர்கள் கணினிகள் வாங்குவதற்கு முன்பணம் வழங்க, ரூபாய் 25,00 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## கடன்களைத் திருப்பி வசூலித்தல்.

14. முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்டு, 1992–93 ஆம் ஆண்டில் வசூலாகும் தொகை ரூபாய் 100,38.73 இலட்சமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

15. முக்கியமான நிதியொதுக்கீடுகள் குறித்த பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(இணைப்பு செலவினங்கள்)

| | 1992–93 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1. வேளாண்மை : | |
| மண்வளப் பாதுகாப்பு .. .. .. | 3,20.72 |
| 2. தொழில்கள் : | |
| தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம் (சிப்காட்). | 3,50.00 |
| மாவட்டத் தொழில் மையங்கள் — (தொடக்க உதவித் தொகை வழங்குவதற்காக). | 65.00 |
| தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் .. | 7,00.00 |
| தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் .. | 12,50.00 |
| 3. கைத்தறி : | |
| கைத்தறிகளை நவீனப்படுத்த நெசவாளர் .. | .. |
| கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள் .. | 1,00,.00 |
| 4. வீட்டு வசதி-நகர்ப்பகுதி வளர்ச்சி : | |
| தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் வாடகை வீட்டு வசதித் திட்டங்கள் | 7,00.00 |
| தமிழ்நாடு நகர்ப்புறப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிலமேம்பாடும் குடிசை மேம்பாடும் | 9,75.00 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1992 ஏப்ரல் 23

| | |
|---|---|
| ஒட்டு மொத்தமாக நிலம் கையகப்படுத்தல், நில மேம்பாட்டுத் திட்டங்கள் .. .. | 1,50.00 |
| தமிழ்நாடு நகராட்சி வளர்ச்சி நிதியகத்திற்குக் கடன்கள் .. .. .. .. .. | 18,00.00 |
| குறைந்த வருவாய் பிரிவினர் வீட்டு வசதித் திட்டம். .. .. .. .. .. | 1,00.00 |
| தமிழ்நாடு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்ட வாரியத்திற்கு-நிதியத்திற்குக் கடன்கள் .. | 2,00.00 |
| நெறிமுறைப்படுத்தப்பட்ட வளர்ச்சித் திட்டங்களுக்குக் கடன்கள் .. .. | 1,00.00 |
| 5. மின் சக்தி : | |
| தமிழ்நாடு மின் வாரியத்திற்கான ஏனைய கடன்கள் .. .. .. .. | 75,00.00 |
| மின்சக்தி நிதி உதவி-அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்திற்குக் கடன்கள் .. | 50,00.00 |
| 6. கல்வி, கலை, பண்பாடு : | |
| தேசியப் படிப்புதவிக் கடன் திட்டம் .. | 30.00 |
| 7. ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் : | |
| தொழிற்கல்வி, பட்டப்படிப்பு பயில ஆதிதிராவிடர்-பழங்குடியினருக்குக் கடன்கள் .. | 86.95 |
| 8. மறுவாழ்வுத் திட்டங்கள் : | |
| இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு வீட்டு வசதிக் கடன்கள் | 1,50.00 |

9. உள்ளாட்சி மன்றங்கள் (குடிநீர் வழங்கல் வடிகால் திட்டங்களைத்தவிர) :

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1992 ஏப்ரல் 23]

நகராட்சிகள் :

| | |
|---|---|
| நகராட்சி சாலைகள் .. .. .. | 50.00 |
| சாலைகள், பாலங்கள் அமைத்தல் .. .. | 50.00 |

10. மாநகராட்சி :

| | |
|---|---|
| சென்னை மாநகராட்சி .. .. .. | 6,00.00 |

11. கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள் :

| | |
|---|---|
| தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கிக் கடன்கள் | 1,80.00 |
| வேளாண்மை இடுபொருட்களை வாங்கி, வழங்க கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள் .. .. .. .. .. | 12,00.00 |

12. அரசுப் பணியாளர்களுக்கான கடன்கள் :

| | |
|---|---|
| வீடுகள் கட்டுவதற்கு அரசுப் பணியாளர்களுக்குக் கடன்கள் .. .. .. .. .. | 25.00.00 |
| மோட்டார் வண்டிகள் வாங்குவதற்கான கடன்கள் .. .. .. .. .. | 4,10.00 |
| கைத்தறித் துணிகள் வாங்குவதற்கு அரசுப் பணியாளர்களுக்கு முன் பணங்கள் .. | 9,00.00 |
| ஏனைய போக்குவரத்து வாகனங்கள் வாங்குவதற்கான முன்பணம் .. .. | 1,25.00 |
| திருமண முன்பணம் .. .. .. .. | 3,00.00 |
| கல்லூரி/பல்தொழிற் பயிற்சிப் பயிலங்களில் மேற்படிப்பிற்கான கடன்கள் .. .. | 1,75.00 |

13. சாலைப் போக்குவரத்துக் கடன்கள் :

| | |
|---|---|
| பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குக் கடன்கள் .. .. .. .. .. | 10,00.00 |

14. ஏனைய கடன்கள் :

| | |
|---|---|
| நகராட்சிப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்ட முன்பணம் .. .. .. .. .. | 50.00 |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அரசினர் கிளை அச்சகம், சென்னை-112.